12 பாடம்

# இருளிலிருந்து வெளியே

***குறுகிய இருண்ட பாதையிலிருந்து வெளிச்சம் கொண்ட அகலமான பாதைக்கு வந்தால் உனக்கு எப்படியிருக்கும்? பெரிய மீனின் வயிற்றிலிருந்து வெளியே வந்த யோனாவுக்கும் அப்படித்தான் இருந்தது.***

மீண்டும் உலர்ந்த கரைப் பகுதிக்கு வந்ததால் யோனா மிகவும் மகிழ்ந்தார். முதல் வேலையாக நன்றாக ஆழ்ந்து சுத்தமான காற்றை சுவாசித்தார். ஏனெனில், மூன்று நாட்களாக மீனின் வயிற்றிலிருந்தது போதும் போதும் என்றாகி விட்டது அவருக்கு.

கண்களை மூடி மூடித் திறந்தார். கை, கால்களை நீட்டி உடம்பை அங்குமிங்கும் அசைத்தார். தேவன் தன்னை உயிரோடு காத்ததற்காக தேவனுக்கு மகிழ்ந்து, நன்றி கூறினார். இப்போது தேவன் இரண்டாவது முறையாக யோனாவிடம் பேசினார்.

‘‘யோனா, நீ எழுந்து நினிவேக்குப் போ. நினிவே மக்களுக்கு நான் சொல்லும்படி உன்னிடம் சொன்ன எச்சரிப்பின் செய்தியைச் சொல்’ என்றார். நினிவே மக்களிடம் பிரசங்கம் செய்ய யோனாவுக்கு இன்னும் விருப்பம் உண்டாகவில்லை. ஆனாலும், தேவனுக்குத் தான் கீழ்ப்படிவதாக வாக்குப்பண்ணியிருந்தார். எனவே, நினிவேக்குப் புறப்பட்டார்.

நினிவேக்குள் சென்றார். தான் சந்தித்த ஒவ்வொருவரிடமும், தான் கண்ணில் கண்ட ஒவ்வொரு மனிதனிடமும் தேவன் தனக்குத் தந்த செய்தியைக் கூறினார். ‘‘இன்னும் நாற்பது நாள் மட்டுமே உண்டு; தேவன் இந்த நினிவே நகரத்தை அழிக்கப் போகிறார். ஆகையால், நீங்கள் யாவரும் மனந்திரும்புங்கள்’’ என்றார்.



நினிவே இன்னும் 40 நாளில் அழியப் போகிறதாம் என்று நினிவே முழுக்க இந்தச் செய்தி காட்டுத் தீ எனப்

**மனன வசனம்**

**கர்த்தர் ... ஒருவரும் கெட்டுப்போகாமல் ... எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று ... நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். 2பேதுரு 3:9.**

பரவியது. செய்தியைக் கேட்ட ஒவ்வொருவரும் பரபரப்பானார்கள். "என்ன! நினிவே அழியப்போகிறதா? ஏன்? அழிவைத் தடுக்க வழியே இல்லையா? அப்படியானால் நாம் என்ன செய்யவேண்டும்?" என்று ஒருவருக்கொருவர் கேட்டுக்கொண்டார்கள்.

ஒவ்வொருவரும் மிகவும் பயந்து நடுங்கினார்கள். அழிவிலிருந்து தாங்கள் காக்கப்பட, என்ன செய்யவும் ஆயத்தமாயிருந்தார்கள்.

எனவே, நினிவேயிலுள்ள மக்கள் தேவனை விசுவாசித்து உபவாசஞ் செய்யும்படிக் கூறினார்கள்; பெரியோர் முதல் சிறியோர் வரை இரட்டு உடுத்திக்கொண்டார்கள். சாப்பிடாமலும் தண்ணீர் குடியாமலும் இருந்து தேவனுக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்தத் தீர்மானித்தார்கள்.

நினிவேயின் அழிவு பற்றிய செய்தி நினிவேயின் ராஜாவுக்கு எட்டியது. உடனே ராஜா தனது சிங்காசனத்திலிருந்து எழுந்தான். தனது ராஜ உடையைக் களைந்தான். இரட்டு உடுத்திக் கொண்டு சாம்பலில் உட்கார்ந்தான்.

அதுவுமன்றி, தனது நாட்டு மக்களும் மிருகங்களும்கூட உபவாசம் இருக்குமாறு செய்தான். "மனிதர்களும் மிருகங்களும்கூட இரட்டு உடுத்திக் கொண்டு தேவனை நோக்கிக் கூப்பிடவேண்டும்" என்றான்.

"நாம் நமது பொல்லாத வழியை விட்டுத் திரும்பினால் தேவன் நம்மேல் இரக்கங்கொள்ளக்கூடும்; நம்மை அழிக்காமல் காப்பார்" என்றும் சொன்னான்.

நினிவே மக்களும் ராஜா சொன்னபடியே செய்து



## செய்தி

**தேவனுடைய இரட்சிப்பின் செய்தியைப் பிறரிடம் சொல்ல தேவன் எனக்கு உதவுவார்.**

தேவனுக்குமுன்பாகத் தங்களைத் தாழ்த்தினார்கள். தங்கள் மிருகங்களும் மேயாதவாறும், தண்ணீர் குடியாதவாறும் பார்த்துக்கொண்டார்கள். தேவனை நோக்கிக் கெஞ்சினார்கள்.

உண்மையாகவே மக்கள் தங்கள் மனம் மாறியதையும், தங்களைத் தாழ்த்தியதையும் தேவன் பார்த்தார். அவர்கள் மேல் இரக்கம் கொண்டார். அவர்களை அழிக்காமல் மன்னித்து, ஆசீர்வதிக்க தேவன் கிருபை செய்தார். மக்கள் தேவனைத் துதித்தனர்.

என் அன்பே! நாம் தேவனுக்குப் பயப்படுவோம். தேவனிடம் பாவங்களை அறிக்கை செய்வோம்.

***செய்முறை:*** **நினிவே மக்கள் பாவத்திலிருந்து திரும்பி, தங்கள் கவலைகள் நீங்கி, தேவனுடன் மகிழ்வான வாழ்க்கை வாழ்வதற்காக, அவரிடம் செல்ல வழிகாட்டி உதவு.**



**புதிர் 12**